தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1975 மார்ச் 29.

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

வேலூர் காவலர் பயிற்சி நிலையம்.

*476 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் போலீஸ் பயிற்சி நிலையத்தில் **1973-74**-ல் பயிற்சி பெற்றவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களில் டெப்டி சூப்பரின்டென்டென்ட்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) வேலூரிலுள்ள போலீஸ் பயிற்சி நிலையத்தில் 1973-74 ஆம் ஆண்டில் பயிற்சி பெற்றவர்கள் **2,042** பேர்.

(இ) இவர்களில் டெப்டி சூப்பரின்டென்டென்ட்கள் 6 பேர்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, டெப்டி சூப்பரின்டென்டென்ட்கள் ஆறு பேர்தான் பயிற்சி பெற்றிருப்பதாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய நாட்டில் இந்திய அரசு ஐ.பி.எஸ்.–க்கு தேர்ந்தெடுப்பதைப் போல, நம்முடைய மாநில அரசு டி.எஸ்.பி. பதவிக்கு டைரக்ட் ரெக்ரூட்மெண்ட் எண்ணிக்கையை அதிகமாக்குமா? அப்படி அதிகமாக்கினால், நம்முடைய மாநிலத்தைச் சார்ந்தவர்கள் தமிழ் மொழி மீது பற்றுள்ள இப்படிப்பட்டவர்களை நாம் வேலையில் நிர்ணயம் செய்ய முடியும் அல்லவா? ஆகவே, டி.எஸ்.பி. பதவிக்கு டைரக்ட் ரெக்ரூட்மென்டின் எண்ணிக்கையை அதிகரித்து அவர்களுக்குப் பயிற்சி கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுதுள்ள நிலைமைக்கும் தேவைக்கும் ஏற்ப இப்படிப்பட்ட பதவிகளினுடைய எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்து மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, புதிதாக சப்-இன்ஸ்பெக்டர்கள் பயிற்சி பெறக்கூடியவர்கள் மக்களிடத்திலே நல்ல முறையில் பழக வேண்டும் என்பதற்காக ஸ்பெஷல் வகுப்புகள் ஏதாவது நடத்தப்படுகின்றனவா? இந்த வேலூரைப் பொறுத்த வரையில், அதிகாரம் இல்லாத போலீஸ், இராஜா இல்லாத கோட்டை, சாமி இல்லாத கோயில் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. அந்தப் பெயரை மாற்றக் கூடிய முறையில் இந்தப் பயிற்சி நிலையத்தில் இருப்பவர்களோடு அதிகாரம் உள்ள போலீசைச் சேர்த்து அமைப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆண்டவன் இல்லாத ஆலயம், அழகில்லாத பெண்கள், அதிகாரம் இல்லாத போலீசார் என்று சொல்வதுண்டு. ஆண்டவன் இல்லாத ஆலயம் என்பது உண்மை. அழகுள்ள பெண்களும், அதிகாரம் உள்ள போலீசும் இருக்கிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : போலீஸ் பயிற்சியில் ஏற்கனவே பரம்பரையாகக் கொடுக்கும் பயிற்சியோடு அல்லாமல், ஒவ்வொரு ஸ்டேஷனிலும் புகார் செய்கின்றவர்களையும், புகாருக்கு உள்ளானவர்களையும் நடத்த வேண்டிய விதம் பற்றி தனிப் பயிற்சி கொடுத்தால் நல்லதாக இருக்கும். பழைய முறையிலேயே நடந்து கொண்டிருக்கும் சூழ்நிலை இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. அதை மாற்றுவதற்கு முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கனவே சில பயிற்சி முறைகள் இந்த முகாமில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவைகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டதுபோல, மக்களிடத்தில் எந்த வகையில் பழகுவது போன்றவற்றிலும் அந்தப் பயிற்சி நோக்கில் இப்பொழுது அவர்களுக்குப் பயிற்சி தரப்படுகிறது. அதைப்போல மாண்புமிகு உறுப்பினர் திரு. சுரேந்திரன் அவர்கள் கேட்ட கேள்விக்கு ஏற்ப, இன்றைக்குள்ள கால நிலைக்கேற்ப போலீசார் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதற்கான பயிற்சிகளும் அவர்களுக்கு அளிக்கப்பட்டுதான் வருகின்றன.

திரு. க. உரோ. எட்மண்ட் : நம்முடைய காவல் துறையைச் சார்ந்த போலீஸ் காவலாளிகளுக்கு வழக்கமாகக் கொடுக்கப்படுகிற பயிற்சிகளோடு சேர்த்து மிக நெருக்கடியான சூழ்நிலையில் தீயணைக்கும் பணியை மேற்கொள்ள பயிற்சி கொடுக்கும் முயற்சியையும் அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தீயணைப்பதற்கென்று தனியாக தீ அணைப்பு முறைகளில் பயிற்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் போதாத நேரத்தில் காவலர்களும் அப்படிப்பட்ட காரியங்களில் நிச்சயமாக ஈடுபடுவார்கள். அதற்கான பயிற்சிகள் இப்பொழுது அவர்களுக்கு இருக்கிறதா என்ற தகவல் என்னிடத்தில் இல்லை. இவர்களுக்கு அப்படிப்பட்ட பயிற்சி அளிக்கலாமா என்பதையும் யோசிக்கலாம்.

திரு. வை. பாலசுந்தரம். : போலீஸ்காரர்களுக்கு கராத்தே போன்ற பயிற்சி அளிக்கப்படுகிறது. அதேபோன்று தமிழ் நாட்டு வீர விளையாட்டு என்று சொல்லப்படுகிற சிலம்பம் போன்ற விளையாட்டைப் போலீசாருக்குக் கற்றுக்கொடுத்தால் நல்லதல்லவா? அதை அரசு பின்பற்றுமா?

1975 மார்ச் 29]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: போலீசாருக்கு கராத்தே போன்ற பயிற்சி அவர்கள் நல்ல முறையில் எதிரிகளைச் சமாளிப்பதற்கும், அதே நேரத்தில் அடக்குமுறைகள் அதிகமில்லாத அளவுக்குப் பாது காக்கின்ற வகையில் அமைந்திருக்கிறது. சிலம்பம் போன்றவைகளெல்லாம் போலீசாருக்குத் தேவையில்லாத பயிற்சிகள். ஆனால், அப்படிப்பட்ட பயிற்சிகளை அவர்கள் தனியாகக் கற்றுக்கொள்வதைப்பற்றித் தடை இல்லை.

திரு. என். கே. பழனிசாமி: இந்தப் பயிற்சி நிலையத்தில் அசிஸ் டெண்ட் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கும் பயிற்சி கொடுக்கப்படுகிறதா? வேலூரில் பயிற்சி அளிப்பதை மற்ற இடங்களுக்கு மாற்றக்கூடிய செயற் குறிப்பு இந்த சர்க்காரிடம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்தப் பயிற்சி நிலையத்தில் அசிஸ்டென்ட் சூபரின்டென்டென்ட்கள், டெபுடி சூபரின்டென்டென்ட்கள், நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சப்-இன்ஸ்பெக்டர்கள், பதவி உயர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட சப்-இன்ஸ்பெக்டர்கள், பதவி உயர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்நிலைக் காவலர்கள், நேரடியாகத் தேர்ந்தெடுக கப்பட்ட இரண்டாம் நிலைக் காவலர்கள் ஆகியோருக்கு மாத்திரம் இங்கே பயிற்சி அளிக்கப்படுகிறது.

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, இப்பொழுதெல்லாம் ஐ. பி. எஸ். பதவிகள் தமிழ் நாட்டுக்குத் தகுந்த அளவுக்கு முன்போல் கிடைப்பதில்லை. ஐ.பி.எஸ். தேர்வில் ரிட்டன் டெஸ்டில் தேறிவிடு கிறார்கள். ஆனால், இன்டர்வ்யூவில் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. ஆகவே, அந்தக் குறையைப் போக்குவதற்கு நம்முடைய தமிழக அரசு ஐ.பி.எஸ். கேடரைப் போன்று இங்கே ஒரு கேடரை உருவாக்கி, நம்முடைய பப்ளிக் சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்ந்தெடுக்க முயற்சி மேற்கொள்ளுமா? இது வரையில் டி.எஸ்.பி. கேடரில் பெண்கள் யாரும் தேர்ந்தெடுக்கப்பட வில்லை. இனிமேல் பெண்களுக்கும் அதிலே இடம் கொடுத்து அவர் களைத் தேர்ந்தெடுக்கும் முயற்சியை அரசு மேற்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஐ.பி.எஸ். கேடர் பற்றி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது ஆழ்ந்து சிந்திக்கப்படவேண்டிய ஒன்று. இப்பொழுதுதான் நம்முடைய தமிழகத்தில் பெண்கள் போலீஸ் படையொன்று ஆரம்பமாகியிருக்கிறது. இந்தப் போலீஸ் படை விரி வாக்கப்படும்பொது, டி.எஸ்.பி. போன்ற பதவிகளைப் பற்றி யோசிக்கலாம்.

திரு. த சோனையா: போலீசுக்கு பயிற்சி கொடுக்கிற முகாம் வேலூரில் இருக்கிறது. ஆனால், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற மாவட்டங்களுக்குத் தனியாக மதுரையில் ஒரு பயிற்சி முகாமை ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா? இல்லையென்றால், இனியாகிலும் ஏற்படுத்த முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பயிற்சி முகாம் வேலூரிலும், கோவையில் காவலருக்கு பயிற்சி அளிக்கிற முகாமும் இருக்கிறது. வேறு பயிற்சி முகாம் எதையும் எங்கும் ஏற்படுத்தும் உத்தேசம்—நிதி ஆதாரம் அரசுக்கு இல்லை